1981 பிப்ரவரி 5]

திரு. எஸ். சிவராமன் : விவசாயத் துறையில் அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் நியமிக்கப்படுவார்களா என்று கேட்டதற்கு 'இல்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக டெக்னிகல் லைனில் இருக்கக்கூடியவர்களை மருத்துவம், கால்நடைத் துறை ஆகியவற்றில் இயக்குநர்களாக, துறையின் செயலாளர்களாக ஆக்கினால் அவர்களுக்கு அந்தத் துறையைப் பற்றி நன்றாகத் தெரியும் என்ற முறையில் நன்றாகச் செயல்பட முடியும். ஆகவே, அவ்வாறு நியமிக்கப்பட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வேளாண்மைத் துறை இயக்குநர் பொறுப்பு பதவி இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அலுவலரால் பொதுத்துறையில் இருந்து நியமிக்கப்படுகிறது. துறை வல்லுநரை நியமிக்க வேண்டுமென்ற பிரச்சினை இப்போது எழவில்லை.

திரு. எஸ். சிவராமன் : மத்திய அரசு பொறுப்பில் இருந்து நியமிக்கப்படுவதாகச் சொன்னார்கள். மாநில அரசு அதை மாற்றியமைக்க சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

ஐங்கால்பட்டி சாலை.

*வினா எண். 192—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி ஐக்கியநாயக்கனூர், ஐங்கால்பட்டி (வழி) அழகன்பட்டி ரோடு ஆர். ஆர். ஸ்கீமிலிருந்து எப்போது அனுமதிக்கப்பட்டது ?

(ஆ) இதுவரை எவ்வளவு வேலை முடிக்கப்பட்டிருக்கின்றது ?

(இ) வேலை சுணக்கமாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) 1—4—1977-ல்.

(ஆ) 3 கி. மீட்டர்.

(இ) சில பட்டாதாரர்கள் தங்கள் நிலங்களை சாலை அமைக்க கொடுப்பதற்கு மறுப்பதுடன் அவர்கள் தங்களுடைய நிலங்களில் எந்த வேலையும் செய்யக்கூடாது என ஆட்சேபணை தெரிவிப்பதால் சாலை அமைக்கும் பணியின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது.

[1981 பிப்ரவரி 5

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : இது 1977-ல் சாங்ஷன் செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் முடிந்து அய்ந்தாவது ஆண்டு ஆரம்பமாகி விட்டது. நம்முடைய அரசு தீவிரமாகப் பல நல்ல காரியங்களைச் செய்யக்கூடிய சூழநிலையில் இருக்கும்போது என்னுடைய சொந்த ஊரான அழகன்பட்டியில் அந்த ரோட்டை உடனடியாகப் போட்டுக் கொடுக்க முனவருவார்களா? அந்த ரோடு போடும் பகுதி நத்தம் புறம்போக்கில் தான் இருக்கிறது. தனி மனிதரிடம் இல்லை. அந்த இடத்தில் ரோடு போடுவதை யாரும் தடுக்க முடியாது, உரிமை கிடையாது என்பதை அமைச்சர் அவர்கள் உணருவார்களா? ஆகவே, சட்டப் பேரவைக் கூட்டம் முடிவதற்குள்ளாக பாக்கி ரோட்டை போட்டுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ரோடெல்லாம் நான்கு நாட்களில் போட முடியாது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதிலே நத்தம் புறம்போக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், தனிப்பட்ட நபர்களுடைய நிலங்கள் இருக்கின்ற காரணத்தால்தான் இந்தத் தடை. அந்த நிலங்களைக் கையகப்படுத்த ஏற்கனவே 4 (1) நோட்டிபிகேஷன் 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16-ம் தேதியில் கொடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் கையகப் படுத்துகிற நிலத்திற்கு முன் பணமாகக் கொடுக்க வேண்டு மென்று கேட்டிருக்கிற காரணத்தால் சட்ட ரீதியாக அவைகளை எடுக்கின்ற நிலைமையில் சிறு தடை ஏற்பட்டிருக்கிறது. உடனடியாகக் கூடிய சீக்கிரத்திலே வெகு விரைவிலே அந்தச் சாலை அமைத்துத் தரப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அங்கே நத்தம் புறம்போக்கு உள்ளது. என் ஊர் அது. நான் குடியிருக்கிறேன். ஆகவே நத்தம் புறம்போக்கில் உடனடியாக வேலையை முடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளில் நத்தம் புறம்போக்கு என்று இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருந்தால் வெகு இலகுவாக வேலையை முடிக்க முடியும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே கிராமங்களுக்கு ரோடு போடக்கூடிய நேரத்திலே பல இடங் களிலே ரோடு போடக்கூடிய இடங்களைத் தனியார்கள் வைத் துக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் அரசினுடைய வேலைக்கு

அது இடைஞ்சலாக இருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்வதில் கறாராக இருந்து ரோடு போடுவதற்கு வீடுகள் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆனாலும் பதில் சொல்கிறேன். தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மானாமதுரையில் வைகை ஆற்றுப் பாலம்

*வினா எண். 193— திரு. க. பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மானாமதுரை நகரில் வைகை ஆற்றின்மீது கட்டப் பட்டிருக்கின்ற பாலத்தைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்—1980–81–ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் இப்பணிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

திரு. க. பாரமலை ; பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு அனுமதி வழங்கியிருப்பதற்காக நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன். மானாமதுரை மிக வேகமாக வளர்ந்து வருகிற நகரம். சிப்காட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட் டிருக்கிறது, பி. ஆர். சி. ஒர்க்ஷாப்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. ஆகவே தேவையான நடவடிக்கைகளை எடுத்து விரைவாக நிறைவேற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வைகை ஆற்றின் குறுக்கே அந்தப் பாலம் இருக்கிறது, அது மிகக் குறுகியதாகவும், பலவீனமானதாகவும் இருப்பதால் இந்தப் பாலத்தை 60 லட்ச ரூபாய் செலவிலே கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டி ருக்கிறது, அதற்கான ஆணை 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9-ம் தேதியில் வழங்கப்பட்டு இருக்கிறது. கூடிய சீக்கிரத்திலே வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அந்தப் பாலம் காசி-இராமேஸ்வரத்தை இணைக்கக்கூடிய முறையிலே தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கக்கூடிய நிலையிலே இருக் கிறது, ஆகவே அதைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன்.